# <u>பொன்னேரி நகராட்சி</u>

## <u>நகர்மன்ற அவசரக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் **2022** ஆம் ஆண்டு மே மாதம் **13.05.2022** வெள்ளிக்கிழமை மாலை **4.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

<u>பொருள் எண் 1</u>

பொன்னேரி நகராட்சி வார்டு எண் 23, வெள்ளோடை ரோடு முனீஸ்வரர் கோயில் பகுதியில் உள்ள ஐம்பது குடும்பங்கள் கொடூர் கிராம ஊராட்சியிலிருந்து குடிநீர் பயன்படுத்தி வந்தனர். தற்போது மேற்படி ஊராட்சியிலிருந்து குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் அப்பகுதியில் ஒரு போர்வெல் அமைத்து பொதுமக்களின் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்து தரக்கோரி வார்டு உறுப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை **31.03.2022** தேதிய நகர் மன்ற தீர்மானம் எண் **16**ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணிக்கு ரூ.**4.50** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பெறப்பட்டுள்ளது. மேற்படி போர்வெல் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 366 /2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 36 நாள்: 13.05.2022

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண் 2</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண் 1725 /2022 /M3 நாள் **06.05.2022** வாயிலாக நகர்மன்ற தலைவர்களுக்கு SCORPIO வாகனம்ரூ.**16.82** இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட ( GEM Rate ) விலைக்கு மிகாமல் விதிகளுக்கு உட்பட்டு வாங்கிக்கொள்ள நகர்மன்ற ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக செயற்குறிப்பினை அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பொன்னேரி நகராட்சி நகர் மன்ற தலைவர் பயன்பாட்டிற்காக Mahindra தயாரிப்பு நிறுவனத்தின் SCORPIO S11 2WD 7STR BSVI MODEL வாகனம் அரசு நிர்ணய விலைக்கு மிகாமல் ( GEM Rate )

அடிப்படையில் வாங்குவதற்கும் தோராய செலவின தொகை ரூ.16.82 இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 654/2021/இ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 37 நாள்: 13.05.2022

தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.